# கல்முனையில் நாளை ஆரம்பமாகும் இஸ்லாமிய

Registered as a Newspaper in Ceylon

** விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10

இதழ் 184

பதிவிலக்கம் எண். 49

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் விலை ஆடி 29 ஜு அவ் 18 செவ்வாய்க்கிழமை (13-8-68)

# சோஷலிஸ மாநாடு
## 5 லட்சம் பேர் கலந்து கொள்வராம்

கல்முனை, திங்கள்

இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் 2-வது மகா நாடு இம்மாதம் 14-ம், 15-ம், 16-ந் திகதிகளில் கல்முனையில் அமைக்கப்பட்டுள்ள மஹ்மூத் நகரில் நடைபெறவிருக்கின்றது. இம்மகாநாட்டிற்கு சுமார் ஐந்து லட்சம்பேர் இலங்கை பூராவிலுமிருந்து பங்கு பற்றக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதுசம்பந்தமாக மஹ்மூத் நகரில் தபாற்கந்தோர், பஸ் நிலையம், வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் ஆகிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று 13-ந் திகதி காலை 10-30 மணிக்கு கொழும்பு

[5-ம் பக்கம் பார்க்க]

# தமிழக சபாநாயகர் எஸ்.பி. ஆதித்தன் ராஜினாமா

சென்னை, ஆக. 12

தமிழக கீழ் சட்டசபையின் சபாநாயகர் திரு. எஸ். பி. ஆதித்தன் தமது சபாநாயகர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

திரு. ஆதித்தன் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தமிழகத்தில் பதவிக்கு வந்ததிலிருந்து கீழ்சட்டசபையின் சபாநாயகராக இருந்துவந்துள்ளார். கடந்த தேர்தலின்போது தி.மு.க. வுடன் செய்துகொண்ட கூட்டு ஒப்பந்தத்தின்பேரில் 'நாம் தமிழர்' இயக்கத்தலைவரான திரு. ஆதித்தன் தி. மு. க. அரசின் கீழ்சட்டசபையின் சபாநாயகராக பதவிஏற்றார். முதலில் அவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்படலாமென்று பேச்சு அடிபட்டபோதிலும் பின்னர் அவருக்கு சபாநாயகர் பதவி அளிக்கப்பட்டது.

திரு ஆதித்தன் தற்பொழுது தமது பதவியை ராஜினாமாச் செய்வதற்கானகாரணம் எதுவும் உடனடியாக கிடைக்கவில்லை.

சபாநாயகர் பதவியை ராஜினாமாச் செய்தாலும் திரு. ஆதித்தன் சட்டசபையின் உறுப்பினராகத் தொடர்ந்து பதவிவகித்து வருவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆதித்தன் அண்மையில் நடைபெற்ற தென்காசி உபதேர்தலில் அரசாங்கக்கட்சியின் வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்ததுகுறித்து எதிர்க்கட்சியினர் கடுமையான ஆட்சேபனை தெரிவித்திருந்தனர். சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டுப் ஒருவர் கட்சி சார்பு இல்லாமல் நடந்து கொள்ளவேண்டுமென்றும், கட்சி நலன்களுக்காக பிரசாரத்தில் ஈடுபடுவது ஜனநாயக தர்மமல்லவென்றும் அவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர். திரு ஆதித்தனின் ராஜினாமா இந்தக் கண்டனத்தின் காரணமாக இடம்பெறுவதாக சில வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது.

திரு. ஆதித்தன் ராஜினாமாச் செய்ததால் அப்பதவி உதவி சபாநாயகரான புலவர் குழந்தைக்கு அளிக்கப்படலாமென்றும் ... செய்யப்படலாமென்றும் கருதப்படுகின்றது.

## "அல்வாய் போன்ற கிராமம் அமெரிக்காவிலும் அமைக்கப்படும்"
### 'ஹோப்' அதிபர் அறிவிப்பு

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் சுகாதாரமாதிரிக் கிராமத்தைப் போன்று அமெரிக்காவிலும் அமைக்கப்படும். இத்தகவலை அமெரிக்க ஆரோக்கியக் கப்பலான "ஹோப்" பின் அதிபர் செல்வி சாம்பர்லேன் அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலிருந்து அறிவித்துள்ளார்.

இருமாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த செல்வி சாம்பர்லேன் அல்வாய் சுகாதார மாதிரிக் கிராமத்தை நேரில் பார்வையிட்டுச் சென்றதைத் தொடர்ந்தே மேற்காணும் தகவலை அல்வாய் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். சண்முகம்பிள்ளைக்கு வாஷிங்டனிலிருந்து "ஹோப்" கப்பல் இன்னம் ஹொறிக்கப்பட்ட ஏயர்-மெயில் கடிதமூலம் தெரிவித்துள்ளார்,

இலங்கையின் சிறிய கிராமங்களுள் ஒன்றான அல்வாய், வல்லரசு நாடான அமெரிக்காவிற்கு வழிகாட்டியாக விளங்குகிறது எனவும் பாராட்டுத் தெரிவித்துள்ள "ஹோப்" கப்பல் அதிபர், "நான் இலங்கையில் தங்கியிருந்தபொழுது அல்வாயில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார மாதிரிக் கிராம ஆக்கவேலைகளை நேரில் பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைத்ததால் வேலைத்திட்டத்தின் திறமையை அறிந்துகொண்டேன். முன்னேற்றம் வாய்ந்த எமது அமெரிக்க நாட்டில்கூட இம்மாதிரி ஆக்கத்திட்டங்கள் எதுவும் இதுவரை அமுல் செய்யப்படவில்லை. நான் அல்வாய்க்கிராமத்தின் சுகாதார நடவடிக்கைகள் பற்றி அமெரிக்க மக்களிடம் விளக்கிக்கூறியுள்ளேன். இத்திட்டத்தைப் பின்பற்ற அமெரிக்காவும் முடிவு செய்துள்ளது" என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இருமாதங்களுக்கு முன்பு அல்வாயில் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## "ஓங்கி ஓங்கி 2-ம் எதிரி கத்தியால் குத்தினர்"
### மண்டைதீவு கொலை வழக்கில் 14-வயது சிறுவன் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

"இரண்டாம் எதிரி கத்தியை காட்டிக் கொண்டு அன்றைக்கு என்னடா செய்தாய்' என்று கூறியபடி வந்தார். இறந்தவர் பின்னுக்குபோனார் 1-ம்எதிரி பின் கையால் தடுத்தபடி ஓடி வந்து இறந்தவரைக் கட்டிப் பிடித்தார். 2-ம் எதிரி ஓங்கி ஓங்கி கத்தியால் குத்தினார். அக்குத்துகள் எங்கு விழுந்ததென்று தெரியாது. அதன் பின் ஓடிவிட்டனர்"

மண்டைதீவு கொலைவழக்கில் சாட்சியமளித்த 14 வயது சிறுவனான சுப்பிரமணியம் ராஜலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும், பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் 67-ம்ஆண்டு ஜனவரி 20-ம் திகதி மண்டைதீவில் கார்த்திகேசு குலசிங்கநாதன், சரவணமுத்து சிவபாதசுந்தரம் ஆகிய இருவரும் ஜயாத்துரை சாம்பசிவமூர்த்தியைக் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ... யின் அனுசரணையுடன் ... ராஜர். எதிர்களுக்காக

[5-ம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர்களுக்கான சேம நலப் பகுதி
### கல்வி அமைச்சில் இயங்கும்

கொழும்பு, திங்.

ஆசிரியர்களுக்கான சேம நலபிரிவுஒன்றை கல்வி அமைச்சு ஏற்படுத்தியுள்ளது.

இந்தப்பிரிவு கல்விமா அதிகாரியின்கீழ் இயங்கும் ஆசிரியர்களின் சம்பளம், சம்பள உயர்வுபோன்ற பிரச்னைகள் பற்றியும், ஆசிரியர்களின் குறைபாடுகள்பற்றியும் கவனிக்கும்.

ஆனால்ஆசிரியர்களின் இடமாற்ற விஷயங்கள் பற்றி இந்தப் பிரிவுக்கு எதுவித சம்பந்தமும் இருக்காது என்று கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார்.

### சங்கானைபட்டினசபை இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம், செவ்.

நேற்று சங்கானை பட்டின சபையின் இடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது 6-ம் வட்டாரத்துக்கு திரு. த. பொன்னம்பலம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

7-ம் வட்டாரத்துக்கு திரு. ச. கந்தசாமியும், திரு. பொ. சுந்தரலிங்கமும் போட்டியிடுகின்றனர்.

(கா. நி.)

## 'நாட்டின் முன்னேற்றம் விவசாயத்தில் தங்கியுள்ளது'
### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பேச்சு

வவுனியா, திங்கள்

"இலங்கையின் பொருளாதாரத்தை கட்டுவதாகில் விவசாயத்தால் தான் கட்டமுடியும். விவசாயத்தை நல்லமுறையில் செய்தால் இலங்கையில் இருந்து உணவுப்பொருட்களைப் பிற நாடுகளுக்கு அனுப்பலாம். இவ்விஷயத்தில் அரசாங்கத்துடன் உள்ளூராட்சி மன்றங்களும் ஒத்துழைத்து செயல்படவேண்டும். உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்கள் தத்தமது வட்டாரங்களைக் கண்காணித்து ஆவனசெய்தல்வேண்டும்."

இவ்வாறு நேற்று முன்தினம் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரியாலயத்தில் நடைபெற்ற வவுனியா மாவட்ட 17 உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மகாநாட்டில் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. நல்லநாதன் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: தேர்தலில் பல கஷ்டங்களை அனுபவித்து வெற்றியடைந்தது போல் உணவு உற்பத்தியிலும் அக்கறை காட்டி உழைக்க வேண்டும் என்றார்.

கிராமசபை ஒவ்வொன்றும் நாட்டில் வேலையற்று இருக்கும் இளம் பெண்களுக்கும், வாலிபருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதற்காக கைத்தொழில் வசதி ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அரசாங்கம் நெசவு நிலையம், தும்புக்கைத்தொழில் நிலையம், தையல் நிலையம் போன்றவை அமைக்க உதவிசெய்யும் என்றார்.

## திலகமகராஜ் சுவாமிகள்

யாழ்ப்பாணம், செவ்

இமயமலை திலகமகராஜ் சுவாமிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்கு விமானமூலம் வந்துசேர்ந்தார்.

இங்கு சுவாமிகள் சுமார் ஒரு மாதகாலம்வரை தங்கியிருக்கும் சமயத்தில் இலங்கையின் பல இடங்களுக்கும் சென்று சமயசொற்பொழிவாற்றுவார்.

இவர் நேற்று முன்தினம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று முருகனின் பெருமை பற்றி சொற்பொழிவாற்றினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மிருசுவில் கிராமசபை கேள்விப்பத்திர விளம்பரம்

மிருசுவில் கிராமசபைக்காக ''எழுதுமட்டுவாழ் நாகர்கோவில்றோட்'' வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. மேற்படி வேலைக்கு 21-8-68 புதன் காலை 9-00 மணி வரை கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுக்காசு ரூபா 25/- [இருபத்தைந்தும்] பத்திரப் பணம் ரூபா 5/- ம் [ஐந்து] கட்டியதன்பேரில் 19-8-68 பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத பதிவுபெற்ற தகுதியான ஒப்பந்தகாரர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் (யாழ்ப்பாணம்) காரியாலயத்திலும் மிருசுவில் கிராமசபைக் காரியாலயத்திலும் அந்தேசர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
சின்னத்தம்பி பாலசிங்கம்.
அக்கிராசனர்,
கிராமசபை, மிருசுவில்.
916

## ஓர் முகாமையாளர் தேவை

சமாச சில்லறை விற்பனை நிலையத்திற்கு

தராதரம்: (1) ஜி. சி. ஈ. (சாதாரணம்) - எண்கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறுபாடங்களில் சித்தியுடன்.

(2) கூட்டுறவுக்கலாசாலையின் உயர்தர அல்லது சாதாரண பயிற்சி.

வயது: 22 முதல் 40 வரை.

பிணை: காசுப்பிணை ரூபா 1000/-.

ஆதனப்பிணை ரூபா 3000/-.

சம்பளம்: ரூபா 140/- + ரூபா 10/- விசேட படி.

விண்ணப்ப முடிவு திகதி: 23-8-68.

விண்ணப்பங்கள் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேற்பகுதியில் ''முகாமையாளர், விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படவேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்புக் கோவிற்பற்று,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
பண்டத்தரிப்பு,
12-8-68. 924

## நயினாதீவில் சிங்கள ஆசிரியர் வேண்டுமாம்

### கி. சபை தீர்மானம்

நயினாதீவு, திங்கள்

நயினாதீவுக் கிராமசபையின் முதலாவது கூட்டம் தலைவர் திரு. சி. க. தம்பையா தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நயினாதீவு உற்சவ காலத்தில் நடைபெற்ற படகு விபத்து பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கநீதிக்குழு ஒன்றை நியமிக்கும்படி அரசாங்க அதிபரை வேண்டுவதெனவும் நயினாதீவுப் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர் நியமிக்கும்படி கல்விப் பகுதியினரைக் கேட்பதெனவும் நயினாதீவு வங்களாவடித் துறையை மீன்பிடித் துறைமுகமாக்கும்படி அரசாங்கத்தை வேண்டுதல் என்றும் நயினாதீவு உற்சவ காலத்தில் அடியார்கள் குடிதண்ணீர் தேடி அலைவதாகவும், அதை நிவர்த்தி செய்யுமுகமாக அம்பாள் ஆலய முன்றலில் தண்ணீர் தொட்டியொன்றைக் கட்டும்படி கோவில் பரிபாலன சபையாரை வேண்டுதல் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## ரயிலின் முன்னால் பாய்ந்தவர் யார்?

திருக்கோணமலை, திங்கள்

ஓடிக்கொண்டிருந்த ரயிலுக்கு முன்னால் பாய்ந்த ஒருவர் ரயிலால் மோதப்பட்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பனையூற்று ரயில் பாதைக்கருகாமையில், ரயிலின் முன் பாய்ந்தவர் யாரென இதுவரை அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை.

கொழும்பு தபால் ரயிலுக்கு முன்னால் பாய்ந்த இவரது நிலைமை படுமோசமாக இருப்பதாகத் தெரிகிறது.

## உடற் பயிற்சிப் போதனை வகுப்பு

பருத்தித்துறை, திங்கள்

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மூலம் உடற்பயிற்சிப் போதனையளிக்கும் சகல ஆசிரியர் - ஆசிரியைகளுக்குமான விடுமுறை வகுப்புகள் இம் மாதம் 14ந் தேதி தொடக்கம் 19ந் தேதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென்றும், இதில் கலந்து கொள்ளும்படியும் வடமாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலம் சகல கல்லூரி அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## பரீட்சைகள்

பருத்தித்துறை, திங்கள்

கல்வி டிப்ளோமாப் பரீட்சை இம்மாதம் 14ந் தேதியும், மூன்றாந்தரக் கூட்டுறவுப் பரிசோதகர் தெரிவுப் பரீட்சை இம்மாதம் 21ந் தேதியும் நடைபெறவிருக்கின்றன.

இலங்கைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் இறுதி வருடச் சட்டப் பரீட்சை இம்மாதம் 26ந் தேதி ஆரம்பித்து 10 நாட்கள் வரை நடைபெறும்.

## இடமாற்றம்

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு யேசுவின் திருஇருதய கோவிலில் பங்குக்குருவாராக மூன்று வருடம் கடமையாற்றிய வண. பிதா செல்லர், திருகோணமலை, சின்னக்கடை மீசாமுக்கு மாற்றம் பெற்றுள்ளார். இவருடைய இடத்துக்கு ஜோன் சிங்கராயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேற்றிராசன சரித்திரத்தில் முதல் தடவையாக ஓ. எம். ஐ. சபையைச் சேர்ந்த குருவானவரிவண. ஜெ. நீக்கிலஸ், கல்லாறு மீசாமுக்கு பங்குக் குருவாராக நியமனம் பெற்றுள்ளார்.

வண. பிதா டிக்கோனி கல்லாறு மீசாமிலிருந்து தேற்றாத்தீவிற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை

விகிதர்:

கமவிதானை - லிகிதர் தேவை. 25 வயதுக்கு மேற்பட்டவரும், ஆங்கில அறிவுள்ளவரும், பிணை ரூபா 100/- கட்டக்கூடியவரும், விண்ணப்பிக்கவும். சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 100/-. அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. 20-8-68க்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, புதுக்குளம் ப. நோ. கூ. ச. 143/2, முரசுமோட்டை, பரந்தன். 8

சேல்ஸ்மன்:

பிணைப்பணம் கட்டக்கூடியான சேல்ஸ் மன்களும், வீட்டுக்கு வீடு, வியாபாரம் செய்யக்கூடிய பெண்களும் நேரில் வரவும் விபரங்களுக்கு ருவல்ஸ்பரன், சங்கரப்பிள்ளை றோட், மானிப்பாய். 9

### உற்சவம்

பருத்தித்துறை திங்கள்

வரெமு மேற்கு கன்னகாம்பாள் கோவில், வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுத் தொடங்கியுள்ளது. தொடர்ந்து 15 நாட்கள் வரை நடைபெறும். இவ்விழாவில் விசேஷ சங்காபிஷேகம், தீ மிதிப்பு, பூங்காவனம் ஆகியன இடம்பெறும்.

இப்பதினைந்து நாட்களும் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் பஜனை நிகழ்ச்சியும் நடைபெறும்.

## ஆஸ்பத்திரியிலும் முடிச்சுமாறிகள்

புலோலி, திங்கள்

மந்திகையிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் முடிச்சுமாறிகள் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிகிறது.

மருந்து பெறக் கியூவில் நின்ற ஒரு நோயாளியின் பர்ஸை முடிச்சுமாறிகள் அடித்துவிட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பள்ளிவாசல் புனருத்தாரணம்

அக்கரைப்பற்று, திங்.

முஸ்லிம்களின் புனிதஸ்தலம் கனிலொன்றான வேலலை வெள்ளைக்கட்டுநகர பள்ளிவாசல், பல லட்சம் ரூபா செலவில் புதிய பள்ளிவாசலாக உருப்பெறுகிறது. இதன் கட்டட வேலைகள் பூர்த்தியடைகின்றன.


### விற்பனையாகின்றது!

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் கதை.
O சாயிபாபாவின் வாழ்க்கைச்சரிதம் அடங்கிய நூல்.
O சில பிரதிகளே உண்டு.
O வி. பி. பி. கவனிக்கப்படும்.

கிடைக்குமிடம்:
அன்பு புத்தகசாலை
27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.




ராஜா (யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-45 மணி
ஜெஸீமா (கொழும்பு) 2-00, 6-00, 9-30 மணி
சாந்தி (மட்டுநகர்) 6-30, 9-30 மணி
சிகிரி (சுட்டுவான்தோட்டை) 2-30, 6-15, 9-30 மணி

மற்றும் சில திரைகளில்

ஜனாதிபதியின் பரிசு பெற்ற கதை!

A. V. M. ராஜன் - புஷ்பலதா - சோ - ஸ்ரீகாந்த் - அசோகன்

திறம்பட நடித்த




எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. ஜெர்மன், ருமேனிய தலைவர்கள் இவ்வாரத்தில் பிராக்குக்கு விஜயம்

பிராக், ஆக. 12

செக்கோஸ்லோவாக்கியா புதிய சோஷலிஸ அரசியற் சீர்திருத்தத் திட்டத்தை வன்மையாக எதிர்த்த ஒரு நாட்டின் தலைவரும், பலமாக ஆதரித்த ஒரு தலைவரும், அந்நாட்டுத் தலைநகரான பிராக்குக்கு இவ்வாரம் விஜயம் செய்கிறார்கள்.

செக். கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை வெகுவாகக் கண்டித்த கிழக்கு ஜெர்மன் தலைவர் திரு. உல்பிரைட், இன்று பிராக் வந்து சேருகிறார். செக். சோஷலிஷ்த்தாரளக் கொள்கைக்கு மனப்பூர்வமான ஆதரவு தெரிவித்த ருமேனியத் தலைவரான திரு. ஷ்டிராஸெஸ்கு இவ்வார இறுதியில் பிராக் வருகிறார்.

ருமேனிய ஜனாதிபதி திரு. ஷ்டிராஸெஸ்குவின் செக். விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கு மிடையேயான நட்புறவு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும் எனத் தெரிகிறது.

## குறுக்கீட்டுக்குக் கண்டனம்

ருமேனிய ஜனாதிபதி நேற்று புக்காரெஸ்டில், பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில், ஒரு நாட்டின் விவகாரங்களில் பிற நாட்டின் நெருக்கம், தலையீடு குறுக்கீடு இவை யாவும் தவிர்க்கப்பட வேண்டுமென்று கூறினர்.

செக் கோஸ்லாவாக்கியாவின் மீது தமக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்த ருமேனிய ஜனாதிபதி கம்யூனிஸ்ட் நாடுகளுக் கிடையேயான பொருளாதார உறவுகளை, அவற்றுக்கிடையே நிலவக் கூடிய கொள்கை வேற்றுமைகள் பாதிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தினர்.

பரஸ்பர மதிப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே அதிக ஒற்றுமை வளர வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

## லண்டனில் வரலஷ்மி பூஜை

லண்டன், ஆக 12

பெரியபிரித்தானியா இந்து மாமன்ற ஆதரவில் கடந்த 2-ம் திகதி 'வரலஷ்மி பூஜை' திரு. ஏ ரி. எஸ். இரத்தினசிங்கத்தின் இல்லத்தில் கொண்டாடப் பட்டது. பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்துகொண்ட இவ்விழாவில் திருமதிகள் சரோஜினி இராமநாதன், பிள்ளை, இரத்தினசிங்கம், செல்வி சின்னத்துரை ஆகியோர் பக்திப்பாடல்களைப் பாடினர்.

மேற்படி மன்றத் தலைவர் திரு. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இவ்விழாவில், செல்வர்கள் தத்துவநாதன், வள்ளிநாதன், வேதநாராயணன், திரு. ச. சிவகுருநாதபிள்ளை ஆகியோர் கூட்டுப்பிரார்த்தனை நடத்தினர்.

பெரிய பிரித்தானியாவில் ஒரு சைவக் கோவிலைக் கட்டுவதற்குப் பலர் பண உதவி செய்துவருகின்றனராம்.

## குஜராத் வெள்ளத்தில் 1000 பேர் பலி

புதுடில்லி, ஆக. 12

இந்தியாவின் மேற்கு ராஜ்யமான குஜராத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்ததாக குஜராத் முதல் மந்திரி அறிவித்துள்ளார்.

கால் நடைகள், பயிர்களுக்கு ஏற்பட்ட பெருஞ்சேதத்தையும் விவரித்த அவர் இத்தகைய ஒரு சேதம் குஜராத்துக்குமுன்னெப்போதும் ஏற்பட்டதில்லை என்று குறிப்பிட்டார்.

## இந்தோனேஷியாவில் 800 கம்யூனிஸ்டுகள் கைது

### 50 பேர் கொல்லப்பட்டனர்

ஜகார்த்தா, ஆக. 12

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவாப்பகுதியில், சந்தேகத்தின்பேரில் 800 கம்யூனிஸ்டுகளைக் கைதுசெய்துள்ளதாக இந்தோனேஷிய ராணுவ வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இவர்களைக் கைதுசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது, 50 பேர் கொல்லப்பட்டதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன.

மேற்கு ஜாவாவில், 4 உயர் தரப்பொலிஸ் அதிகாரிகள், கம்யூனிஸ்ட் தொடர்புகளுடையவர்களெனக் கண்டு பிடிக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டதாகவும் ராணுவ வட்டாரங்கள் கூறின.

## சீன மத்திய மாகாணமான நான்கிங்கில் நிலைமை மோசம்

பீகிங், ஆக. 12

சீனாவின் மத்திய மாகாணமான நான்கிங்கில், மா-சே-துங் எதிர்ப்பு இயக்கம் வலுவடைந்திருப்பதாகவும், நிலைமை மோசமாக இருப்பதாகவும் பீகிங்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கிங் நிலைமை பற்றிக் குறிப்பிட்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், மா எதிர்ப்புச் சக்திகள், கலாச்சாரப் புரட்சியின் மகத்துவத்தைக் குறைத்து வருவதாகத் தெரிவித்தார்.

மா எதிர்ப்புச் சக்திகள், நான்கிங்கில் தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறிய அவர், இரகசிய ரேடியோ நிலையமொன்றை நிறுவியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

லண்டனில்

## நைஜீரிய மாணவர் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஆக 12

லண்டனில், சுமார் 250 நைஜீரிய மாணவர்கள், அங்குள்ள பிரெஞ்சுத் தூதரகத்துக்கு முன்னும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இச் சம்பவம் நேற்று நடைபெற்றது.

பிரிவினை பியவ்ராவுக்குப் பிரான்சு ஆயுதங்கள் அளிப்பதாகவும், அதை எதிர்த்தே தாம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதாகவும் அந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

நைஜீரியாவிலுள்ள பிரெஞ்சு உடைமைகள், நிலையங்கள் யாவற்றையும் தம்மால் வேண்டுமென்றால் அழித்து விடவும் முடியும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

பின்னர், அவர்கள், பிரெஞ்சுத் தூதரகத்தில் ஆட்சேபக் குறிப்பொன்றைச் சமர்ப்பிக்க முனைந்தபோது, பியவ்ராவுக்கு ஆதரவான சுமார் 50 மாணவர்கள், அவர்களைத் தடுக்க எத்தனித்தனர். இதன் விளைவாக ஏற்பட விருந்த மோதலை லண்டன் பொலிஸார் தக்க சமயத்தில் குறுக்கிட்டுத் தவிர்த்து விட்டனர்.

## காஞ்சிபுரத்தில் காங்கிரஸ் இளைஞர்

காஞ்சிபுரம், ஆக. 12

அண்மையில், சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் வாலிபர் ஊர்வலம் ஒன்றின் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்ததைக் கண்டிக்குமுகமாகச் செங்கல்பட்டு இளைஞர் காங்கிரஸின் எதிர்ப்பு ஊர்வலம் நேற்று காஞ்சிபுரத்தில் நடந்தது. ஊர்வலத்தில் 2,000க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

## நுளம்புத் தொல்லை

### நடவடிக்கை கோரி மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ்

"யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கிரேட்டரைச் சுற்றி அரை மைல் சுற்றளவில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் நுளம்புத் தொல்லையால் பெரும் அவஸ்தைப் படுகின்றனர். குறிப்பிட்ட கிரேட்டர் சொந்தக்காரரால் மாநகரசபையினருக்குச் சொந்தமான வடிகால் முடிக்கட்டப்பட்டிருப்பதால் இத் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் மலேரியா போன்ற பயங்கர நோய்கள் பரவிடலாமென அஞ்சுகிறோம். உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்."

இவ்வாறான தந்தியொன்றைத் திருவாளர்கள் சோமசேகரம், சண்முகலிங்கம், பொன்னையா, நவரத்தினம், கார்த்திகேசு, மயில்வாகனம் ஆகியோர் உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## 14 பேர் தெரிவு

உடுப்பிட்டி, திங்.

நேற்று, மந்திகை ஆஸ்பத்திரியில் சுகாதார வைத்திய அதிகாரி முன்னிலையில் மலேரியாத் தடுப்பிலாக்கா ஊழியர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 14 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பதவிக்கு மொத்தம் 92 பேர் விண்ணப்பித்திருந்தனராம்.

## பதெட் லாவோ இளவரசர் ஆர்யான் குத்திக் கொலை

வியன்ஷியென். ஆக. 12

லாவோஸில், பதெட் லாவோ பிரிவினரின் தலைவர்களில் ஒருவரான இளவரசர் ஆர்யான், நேற்றுக் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். அவருடைய கொலைக்கான காரணம், திட்டவட்டமாகத் தெரியவில்லை.

ஆனால், அவரது ரஷ்ய பின்னணி, பீகிங் சார்பான பதெட் லாவோவினருக்கு அவர் மீது வெறுப்பை உண்டாக்கக் காரணமாக இருந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

இளவரசர் ஆர்யானுக்கு கடந்த ஜனவரி மாதம் தான், மாஸ்கோ சர்வகலாசாலையின் எஞ்ஜினியரிங் பட்டதாரிப் பட்டம் கிடைத்திருந்தது.

## 'வியட்னாம் சமாதானத்தை நெருங்கி வருகிறோம்'

### அமெரிக்க உப ஜனாதிபதி ஹம்ப்ரி நம்பிக்கை

வாஷிங்டன், ஆக. 12

அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஹியூபேட் ஹம்ப்ரி, 'முன்னெப் போதையுமிட வியட்னாமில் சமாதானம் காணும்கட்டத்தை நாம் நெருங்கியுள்ளோம்' என்று நேற்று இங்கு டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் தோன்றிப் பேசுகையில் தெரிவித்தார்.

பாரிஸில் நடைபெறும் அமெரிக்க-வட வியட்னாம் பிரதிநிதிகளின் வியட்னாம் சமாதானப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் இப்போது ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வியட்னாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கும் வகையில் ஏதாவது பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடவேண்டாமென அவர் அமெரிக்கர்களைக் கேட்டுக் கொண்டார். குடியரசுக் கட்சித் தலைவர்களை மனதில் வைத்துக்கொண்டே இந்தக் குறிப்பை அவர் வெளியிட்டிருக்கவேண்டுமென கருதப்படுகிறது.

## சிரமதானத்திற்கு அழைப்பு

உடுப்பிட்டி, செவ்

இம்மாதம் 14ந் தேதி தொடக்கம் 4 நாட்களுக்கு எழுதுமட்டுவாள்-நாகர் கோவில் வீதியைச் சிரமதான முறையில் அமைக்க வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. என். ஜெயகாந்தன் திட்டமிட்டுள்ளார். முதல் நாள் இச்சிரமதானத்தை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் ஆரம்பித்துவைப்பார். வடமராட்சிப் பகுதியிலுள்ள 500 தொண்டர்கள் இச்சிரமதானத்தில் பங்குபற்றுவார்கள் எனத் தெரிகிறது. இப்பகுதியில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் அனைத்தையும் பங்குகொள்ளும்படி காரியாதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கைது

அல்லைப்பிட்டி, திங்

பொலிஸாருக்குப் பல மாதங்களாக டிமிக்கி கொடுத்துவந்த ஐ. ஆர். சி. ஒருவர், வேலணையில் உள்ள ஒரு கோவிலில் நடைபெற்ற நாடக மேடையில் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவரைக் கைது செய்யும் போது பொலிஸ் இன்ஸ்பெக்டருக்குத் தலையில் காயம் ஏற்பட்டதாம். இவருக்கெதிராகப் பல குற்றச்சாட்டுகள் இன்னும் உண்டெனத் தெரிகிறது.

கிளிநொச்சி ப. ச.

## இடைத்தேர்தலில் போட்டியிடுவோர்

யாழ்ப்பாணம், செவ்.

கிளிநொச்சிப் பட்டின சபை 1ம், 2ம், 3ம் வட்டாரங்களின் இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் உதவித் தேர்தல் உத்தியோகஸ்தர் திரு. எஸ். கந்தசாமி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன. போட்டியிடுவோர் விபரம் வருமாறு:

1ம் வட்டாரம்: திரு. கி. பாலசுப்பிரமணியம் [தமிழரசு], திரு. கி. மார்க்கண்டு [சுயேச்சை].

2ம் வட்டாரம்: திரு. எஸ். முருகேசு [தமிழரசு], திரு. வி. ஆனந்தசங்கரி [சுயேச்சை].

3ம் வட்டாரம்: திரு. கி. அழகரத்தினம் [தமிழரசு], திரு. ஆர். கிருஷ்ணராசா [சுயேச்சை]. [ந.நி]

## எழுவைதீவில் வீடு தீக்கிரை

அனலைதீவு, ஞாயிறு

வீட்டுக்காரர் கோவில் வழிபாட்டிற்குச் சென்றிருந்த சமயம் பார்த்து வீடொன்றில் தீப்பிடித்துப் பணம் உட்பட பலபொருள்கள் எரிந்து நாசமாகின. இச்சம்பவம் எழுவைதீவில் நடைபெற்றது.

எழுவைதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பலவாணர் ஏரம்பு என்பவரது வீடே தீக்கிரையானது. அன்னாரான அனலைதீவு ஐயனார் கோவில் திருவிழாவுக்கு வீட்டுக்காரர் சென்ற சமயம் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இது விஷமிகளால் திட்டமிட்டுச் செய்த நாசவேலையெனக் கருதப்படுகிறது. இதுபற்றிய விசாரணைகளை எழுவைதீவுக் கிராமசேவையாளர் திரு. கமலநாதன் நடாத்தி வருகிறார். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இறைவனிடம் இடமாக மனதை நிறுத்திவிட்டு உன் காரியங்களைச் செய். அப்பொழுது உனக்கு அபாயங்கள் ஏற்படமாட்டாது.

— ஸ்ரீராமகிருஷ்ணர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

சௌமிய வருஷம் ஆடி மாதம் 29-ந்திகதி
(13-8-68)


## ஆசிய கூட்டுறவு

ஆசியாவின் அபிவிருத்திக்கு விஞ்ஞானம், தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்துவது பற்றி இந்திய தலைநகரான புதுடில்லியில் நடைபெறும் ஒரு மகாநாட்டில் ஆராயப்பட்டு வருகிறது. பதின்மூன்று ஆசிய நாடுகளைச் சேர்ந்த மந்திரிகள் கலந்துகொள்ளும் இந்த மகாநாடு ஐ.நா. கல்வி விஞ்ஞான கலாச்சார கழகத்தின் ஆதரவில் நடைபெறுகிறது. பிராந்திய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஐ.நா. கல்வி விஞ்ஞான கலாசாரக் கழகம் தனது முதல் மகாநாட்டை 1964ம் ஆண்டில் ஆபிரிக்காவில் நைஜீரியத் தலைநகரான லெகாசிலும் 1965ம் ஆண்டில் லத்தின் அமெரிக்காவில் சன்டியாகோ நகரில் இரண்டாவது மகாநாட்டையும் நடத்தியது. ஆசியப் பிராந்தியத்தில் ஜனத்தொகை அதிகரித்திருப்பதற்கேற்ப விஞ்ஞான, தொழில்நுட்ப நிபுணர்கள் அதிகரிக்கவில்லை. மேற்குநாடுகள் பலவும் பொருளாதார முன்னேற்ற மடைந்துள்ளதற்கு அங்கு விஞ்ஞானதொழில் நுட்ப வளர்ச்சிதான் பெரும்பாலும் காரணம். இதை அடிப்படையாக வைத்தே ஆசியப்பிராந்தியத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஆசிய நாடுகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்ப அறிவும் வளர்ச்சியடைய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவும் அதற்கான வழிவகைகளை ஆராயவும் மூன்றாவது மகாநாடு புதுடில்லியில் கூடியுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் விஞ்ஞானிகள், விஞ்ஞானியாளர்களின் தொகையை 1980ம் ஆண்டிற்குள் ஆறு மடங்காக அதிகரிக்க வேண்டுமென்ற ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார கழகம் தயாரித்துள்ள ஆசிய நகல் திட்டத்தை இந்த மகாநாடு பரிசிலனை செய்து வருகிறது.

ஆசியாவில் ஒன்றிரண்டு நாடுகள் விஞ்ஞான தொழில் நுட்பத்துறையில் கணிசமாக வளர்ச்சியடைந்திருக்கின்றன என்பதையும் அந்த நாடுகள் பொருளாதார முன்னேற்றமடைந்துள்ளன என்பதையும் மறந்துவிட முடியாது. இந்தியா உட்பட இதரபல ஆசியநாடுகள் பலவித கஷ்டங்களுக்கிடையிலும் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்காக பெருமுயற்சி செய்து வருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் நாடுவிடுதலையடைந்து பலவருடங்களாகியும் இப்பொழுதுதான் உணவில் தன்னிறைவு காணவேண்டுமென்ற ஆர்வம் அதிகரித்து தீவிர முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கைத்தொழில்களைப் பற்றி தொழில்களில் நமதுநாடு கவனம்செலுத்தத்தொடங்கிய போதிலும் அதற்கான விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு இங்கு இல்லை. இங்கு கிடைத்த, கிடைக்கக்கூடிய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவையும் சக்தியையும்கூட மொழிப்பிரச்சினை மற்றும் அரசியல், இனப்பிரச்சினைகள் காரணமாக நாடு இழக்கவேண்டி நேர்ந்திருக்கிறது. இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியதுபோல விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவையோ, சக்தியை யோபிறரிடமிருந்து கடன் வாங்கியோ, இரவல் வாங்கியோ நமது நாட்டின் தேவையை நிறைவேற்றிவிட முடியாது. இதே சமயம் மேல்நாடுகள் அடைந்துள்ள வளர்ச்சிக்கு சமமாக ஆசிய நாடுகள் தனித்தனியாக இத்துறைகளில் வளர்ச்சியடைய முடியுமென்பதும் சுலபமல்ல. ஆசிய நாடுகள் ஒத்துழைத்தால் ஒரு திட்டம் அமைத்து அதன்மூலம் ஆசிய பிராந்தியமே விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி பெற்று ஆசிய பிராந்தியத்தை பொருளாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்ய முடியும். வெளி வல்லரசுகளின் தயவை எதிர்பார்க்காமலும் தலையீடு இல்லாமலும் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

இலங்கையைப் போலவே ஆசிய நாடுகள் பலவற்றிலும் இன, மொழி, மதப் பிரச்சினைகள் இருப்பதாலும் ஆசிய நாடுகள் பலவற்றுக்கிடையிலும் அரசியல் பிரச்சினைகளும் எல்லைப் பிரச்சினைகளும் இருப்பதாலும் ஆசிய நாடுகளுக்கிடையில் விஞ்ஞான தொழில் நுட்ப கூட்டுறவோ, பொருளாதார ஒத்துழைப்போ சுலபமாக ஏற்படக்கூடியதல்ல. இந்தக் கடினமான காரியத்தில் ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார கழகம் வெற்றியீட்டினால் பெரிய சாதனைதான்.

மத்திய வங்கி

## 66-ம ஆண்டு ஆண்டறிக்கை

பம்பலப்பிட்டி, திங்கள்

1966-ம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை (மூன்று மொழிகளிலும்) பிரதியொன்று 5 ரூபாவுக்கு விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகயிருப்பதாகவும், இவற்றை கொழும்பு இலங்கை மத்திய வங்கி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் (6-ம் மாடி) பெற்றுக்கொள்ளலாம் எனவும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கன்னியருக்கு வெள்ளி விழா

பருத்தித்துறை, திங்கள்

சங் சகோதரி வண. மேரி அலெக்ஸாந்திரா, ஜூலை விழா ஆகியோருக்கு அடுத்தவாரம் இளவாலை கன்னியர் மடத்தில் யாழ் மேற்றிராணியாரின் திவ்விய பூசையைத் தொடர்ந்து வெள்ளி விழா எடுக்கப்படவிருக்கின்றது. சகி. ஜூலேனியா கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் திரு. எஸ். கபிரியேல்பிள்ளையின் மகளாவார்.

## கி. ச. கட்டிடம்

புலோலி, திங்கள்

புலோலி கிராமச்சங்கப் புதிய அலுவலகம் மிகவிரைவில் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

## செய்திச் சுருக்கம்

### தெரிவு

புதுடில்லியிலுள்ள சமஷ்ட பாராளுமன்ற நிலையத்தில் ஒருமாத கால பயிற்சி பெறும் கொழும்பு பாராளுமன்றத்தில் பணியாற்றும் திரு. கே. சிவநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

### பிரஜாஉரிமை

இலங்கை இந்திய ஒப்பந்தப்படி 1964-ல் இருந்து சுமார் ஆறாயிரம் பேர் இலங்கையைவிட்டு இந்தியா சென்றுள்ளனர். இலங்கைப் பிரஜா உரிமை கோரி மனுச் செய்திருப்போருக்கு இம்மாதத்திலிருந்து பிரஜாஉரிமை வழங்கப்படுமென குடியேற்ற வெளியேற்ற இலாகா தெரிவித்துள்ளது.

ஃ ஃ ஃ

### கடினமாக உழைப்போம்

"பட்டினி ஒழிந்தால்தான் நாம் மதச்சடங்குகளை ஒழுங்காக நடத்த முடியும். கடினமாக நாம் உழைத்து எமது பொருளாதாரத்தை விருத்தி செய்வோம்" என உள்நாட்டமைச்சர் கல்மோட்டையில் பௌத்தமண்டலம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

### வவனியா முதலிடம்

பிள்ளைகள் அதிகமாகப் பிறக்கும் இடங்களில் வவனியா முதலிடத்தையும் யாழ்ப்பாணம் இரண்டாம் இடத்தையும் வகிப்பதாகவும் நீர்கொழும்பில்தான் பிள்ளைகள் குறைவாகப் பிறக்கின்றன எனவும் சுகாதார இலாகா தெரிவித்த புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஃ ஃ

### விசேட திட்டங்கள்

"அரசாங்கத்தின் உற்பத்தித் துறையில் குளங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. நீர்ப்பாசனம் மூலம் சாகுபடியை அதிகரிப்பதற்கு விசேட திட்டங்கள் உருவாக்கப்படும்" எனக் காணி நீர்ப்பாசன அமைச்சர், நீர்ப்பாசன இலாகா தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற மகாநாட்டில் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

### மலேரியா தடை இயக்கம்

இலங்கையில் மலேரியாத் தடை இயக்கத்தை தீவிரப் படுத்துவதற்காக சுகாதார அமைச்சு இந்தியாவிலிருந்து 600 டி. டி. ரி. மருந்து அடிக்கும் உபகரணங்களை இறக்குமதி செய்ய ஒழுங்குகள் செய்துள்ளது.

ஃ ஃ ஃ

### ரத்துச் செய்யப்படும்

பதினோராயிரம் ஆயுள்வேத வைத்தியர்களின் வைத்திய லைசென்ஸுகள் சுகாதார அமைச்சினால் ரத்துச்செய்யப்படவிருக்கின்றன.

## மறுமலர்ச்சி மன்றம்

யாழ்ப்பாணம், செவ்.

கைதடியில் எம் ஜி. ஆர். மறுமலர்ச்சி மன்றம் ஒன்று இம்மாதம் 17-ம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவிருக்கின்றது. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி., திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை எம். பி. ஆகியோர் உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். (கா. தி.)

# செம்மணியில் கிடந்த சடலம் பற்றி தகவல்

### மூன்று மாதங்களின் பின் கிடைத்துள்ள புதியதுப்பு

யாழ்ப்பாணம், செவ்.

செம்மணி மயானத்தில் இறந்து கிடந்த வாலிபனின் சடலம்பற்றிய விசாரணையில் பொலிஸாருக்குமேலும் சில புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து கோப்பாய் பொலிஸார் தற்போது கட்டைப்பிராயைச் சேர்ந்த ஒருவரைத் தேடிவருகின்றனர்.

இவ்வருடம் மே மாதம் 14-ம் திகதி செம்மணி மயானத்தில் இறந்து கிடந்த வாலிபரான செல்வநாயகம் இராமச்சந்திரன் என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அடையாளம் காட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டார்.

வடபகுதி பொலிஸ் அதிபருக்கு நேற்றுக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றில் மரணமான வாலிபர் கட்டைப்பிராயில் ஒரு வீட்டில் வைத்து அடித்துக் குற்றுயிராக்கப்பட்டு, நச்சுத்திராவகம் பருக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரணமானவர் தாக்கப்பட்டதை அவ்வீட்டுக்குச் சென்ற பிச்சைக்காரர் ஒருவர் கண்டதாகவும் இத்தகவல் தெரிய வந்துள்ளது.

இதுமட்டுமன்றி மரணமான வாலிபரை செம்மணி மயானத்தில் எரிந்து கொண்டிருந்த இன்னொரு சடலத்துடன் சேர்த்து எரிக்க இவர் எடுத்த முயற்சி கடைசி நேரத்தில் மயான காவலாளியால் முறியடிக்கப்பட்டதாகவும் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.

இதுசம்பந்தமாக பொலிஸாரால் தேடப்பட்டுவரும் கட்டைப்பிராயைச் சேர்ந்தவர் இப்போது தலைமறைவாகவிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் டாக்ஸி ஒன்றையும் பொலிஸார் இப்போது தேடிவருகின்றனர். (கா. தி)

யாழ். மாநகரசபை

## தேர்தல் விஞ்ஞாபனமும் காங்கிரஸ் அபேட்சகர்களும்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தல் விஞ்ஞாபனம், தேர்தல் குழுவின் அறிக்கை ஆகியவை பற்றி இம்மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடக்கும் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் சபைக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில், மாநகரசபையின் 23 வட்டாரங்களுக்கும், அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இளிநொச்சியில் இம்மாதம் இறுதியில் நடைபெறவிருக்கும் வருடாந்த மாநாட்டு ஒழுங்குகள் பற்றி இம்மாதம் 14-ம் திகதி நடைபெறும் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

தொகுதிகள் தோறும் பிரசாரக் கூட்டங்கள் நடாத்துவது பற்றியும் புதிய கிளைகள் நிறுவுவது பற்றியும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

## 'எக்ஸ்றே' இயந்திரத்துக்கு ஓய்வு

யாழ்ப்பாணம், செவ்.

20 வருடத் தொன்மை வாய்ந்த யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி 'எக்ஸ்றே' இயந்திரம் ஒன்றுக்கு விரைவில் ஓய்வுகிடைக்கவிருக்கின்றது. சுகாதார அமைச்சின் உயர்தர அதிகாரிகள் நீண்டகாலத்துக்குப் பின் இந்த முடிவுக்குவந்துள்ளனராம்.

இங்குள்ள இரண்டு 'எக்ஸ்றே' இயந்திரங்களிலும் 20 வருட சேவையிலிருந்து இந்த இயந்திரம் தற்போது அவசரமற்ற சிறு வேலைகளுக்கு மட்டும் பாவிக்கும் நிலையிலுள்ளது. இதுபற்றி பலவருடங்களாக ஆஸ்பத்திரி கமிட்டியும், வைத்தியஅதிகாரியும் மேலிடத்துக்குச் சுட்டிக்காட்டியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

ஆனால் இந்த இயந்திரத்தை மாற்றி புதிய 'எக்ஸ்றே' இயந்திரம் ஒன்றை இங்கு பொருத்த வேண்டிய நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இப்புதிய இயந்திரம் இவ்வருட முடிவுக்குள் இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது. (கா. தி)

கொலைசம்பந்தமாக சரணடைந்த

## சந்தேக நபர்கள் ரிமாண்டில்

காத்தான்குடி, திங்கள்

காத்தான்குடி பட்டின சபை உறுப்பினரான இஸ்மெயில் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நீதிபதி முன் சரணடைந்த சந்தேக நபர்களான முகம்மது. ஹனிபா ஆகிய இருவரையும் இம்மாதம் 16-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் திரு. செனிவிரத்ன உத்தரவிட்டார்.

## எம்.பி.க்களின் புதிய யோசனை

கொழும்பு, திங்கள்

எம்.பி.க்களின் 'சம்பளத்தை' அதிகரிக்காவிட்டால் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியான 'சிராவஸ்தி'யை முடிவிட்டு அதற்காக செலவிடப்படும் ஒரு லட்சத்து 25,000 ரூபாவையும் ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்குப்பிரித்துக்கொடுக்கும்படியும் சிலபிரதிநிதிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

## இவருக்கும் இந்தக்கதி?

சுழிபுரம், திங்கள்

உபதபால் அதிபர் ஒருவர் கதிர்காமத்திலிருந்து தமது வீட்டுக்கு அனுப்பிய கடிதம் அவர்வீடு திரும்பிய பின்பே அவருக்குக்கிடைத்துள்ளது. 5 தினங்களின் பின்னர் வீடு திரும்பிய இவருடன்தான் கடிதமும் வந்துசேர்ந்ததாம். சுகமே போய்ச்சேர்ந்ததாக அனுப்பப்பட்ட கடிதமாம்இது. வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவராம் இவர்.

# உப உ... ஆண்...

## 1968-ம், 69...

### விவசாய ஆ...

யாழ்ப்பாணம், செவ்.

விவசாய உணவு அமைச்சு இலங்கையில் 1968ம்,69-ம் ஆண்டுக்கான உபஉணவுப் பொருட்களின் உற்பத்திக்கான இலக்கை இப்போதே வெளியிட்டுள்ளது. இவ் இலக்கு எதிர்பார்க்கும் பலனைக் கொடுக்குமானால் இன்னும் 3 ஆண்டுகளில் இங்கு

## ஒங்கி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தரம் அட்வகேட் கே. கனகேஸ்வரன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எஸ். சிவராஜா ஆஜரானார்.

ராஜலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

சம்பவம் நடந்த தினம் நான் யாழ்ப்பாணத்திற்கு என் அண்ணன் வீட்டிற்கு புத்தகம் வாங்கச் சென்றேன். அன்றிரவு 7-15 மணியளவில் மண்டதீவிற்கு பஸ்ஸில் வந்தேன். பஸ்ஸில் என்னுடன் சபாரத்தினம், கனகசபாபதி, சிவநாதன், சாம்பசிவமூர்த்தி ஆகியோரும் வந்தனர். மண்டதீவு அம்மன் கோவிலடியில் இறங்கினேன். என்னுடன் வந்தவர்களும் இறங்கினார்கள். பஸ்ஸின் பின்னால் கார் ஒன்று நின்றது, அதிலிருந்து நால்வர் இறங்கினார்கள். அதன்பின் சம்பவம் நடந்தது. அன்றிரவு நான் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன். மறுநாள் ஸ்தலத்தில் மாஜிஸ்திரேட்டிடம் வாக்குமூலமளித்தேன்.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.வி. எஸ். சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: இறந்தவர் உமக்குச் சொந்தமா?-சொந்தமில்லை. என் தகப்பனார் அவரை மச்சான் என்று அழைப்பார். அதனால்தான் அவரை மாமன் என்பேன்.

வழ: கீழ் கோர்ட்டில் சாட்சியமளிக்கையில் இறந்தவர் உமக்குச் சொந்தம் என்றீரா?-இல்லை.

வழ: இறந்தவர் சொந்தமில்லையென வேணுமென்று மறுக்கிறீர்?-இல்லை.

நீதி: நீர் சொல்லாததொன்றை கீழ் கோர்ட்டில் நீதவான் எழுதியிருக்கமாட்டார். எப்படி எழுதியிருப்பார்?-(மௌனம்)

வழ: பொலிஸார் இடத்திற்கு வந்த போது நீர் அங்கு இல்லை?-இல்லை.

வழ: சம்பவம் நடந்த போது நல்ல இரவு?-நிலவு.

சம்பவத்திற்கு முன்னர் 1-ம் எதிரியைக் கண்டதாக பொலிஸில் கூறினீரா?-இல்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## தியேட்டரில் இருவருக்கு...

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின் சட்டத்தை மீறி தியேட்டர்களில் புகைபிடிப்பவர்கள் மீது பொலிஸாரும், மாநகரசபை அதிகாரிகளும் இப்போது பலத்த கண்காணிப்புச் செய்து வருகின்றனர்.

இங்குள்ள 5 தியேட்டர்களில் இவர்கள் இரவு நேரத்தில் திடீர் முற்றுகையிட்டதில் அங்கு புகைபிடித்துக் கொண்டிருந்த சுமார் 25 பேர் இவர்களால் கைது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ப உணவு உற்பத்தியில் மூன்று ஆண்டில் நாடு தன்னிறைவுபெறும்

## ...8-ம், 69-ம் ஆண்டு இலக்கை ...ாய அமைச்சு தயாரித்துள்ளது

தேவையான முழு உப உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்யலா மென எதிர்பார்க்கப்படு கின்றது.

1968—69-ம் ஆண்டுக்கு உபஉணவுப்பொருள் உற் பத்தியில் அரசாங்கம் திட்ட மிட்டுள்ள இலக்கு பின் வருமாறு:

செத்தல்மிளகாய்: 99795 அந்தர், ஈரவெங்காயம்: 7,70,880 அந்தர், பம் பாய் வெங்காயம் 27,250 அந்தர் உருளைக்கிழங்கு: 33,468 அந்தர்.

1965—66-ம் ஆண்டில் 9600 அந்தர் மிளகாயும், 373,440 அந்தர் ஈரவெங் காயமும், 100 அந்தர் பம் பாய் வெங்காயமும், 1966-67-ம் ஆண்டில் 27,027 அந் தர் மிளகாயும். 516,031 அந்தர் ஈரவெங்காயமும், 5,139 அந்தர் பம்பாய் வெங்காயமும், 7,288 தொன் உருளைக்கிழங்கும், 1967 — 68-ம் ஆண்டில் 38,856 அந்தர் மிளகாயும், 6,55,427 அந்தர் ஈரவெங் காயமும், 21,310 அந்தர் பம்பாய் வெங்காயமும், 24,803 தொன் உருளைக் கிழங்கும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உபஉணவு உற்பத்தியை நாட்டின் பல பகுதிகளி லும் அதிகரிக்க விவசாய அமைச்சின் வேலைத்திட் டத்தைத் திட்டமிட்டு அமுல்செய்வதில் விவசாயக் குழுக்கள் தீவிரமாக பங்கு பற்றுவதுடன், விவசாய அபிவிருத்தியைத் திட்ட மிடல் இப்போது கிராமங் களுக்கும் பரவலாக்கப்பட் டுள்ளது. (ஈ. நி)

—

### 7 பேர் காயம் 30 பேர் கைது

நாவலப்பிட்டி, திங்கள் இரண்டு தொழிற்சங்க அங்கத்தவர்களுக் கிடையே நடைபெற்ற கோஷ்டிச் சண் டையில் 7 பேர் காயமடைந் தனர். கொத்மலை லும்பு ஸ்தனாவை டிவிஷனில் நடைபெற்ற இச்சம்பவத் தில் 30 பேர் கைதுசெய் யப்பட்டுக் காவலில் வைக் கப்பட்டுள்ளனர்.

சம்பவ தினமான நேற்று முன்தினம், சம்பளம் எடுத் துக்கொண்டு செல்லுகை யில் இரு சங்கக் கோஷ்டி யினருக்குமிடையே கை வரம் மூண்டு, கல்லெறி, கத்தி வெட்டு ஆகிய அசம் பாவித சம்பவங்கள் நடந்த தாகத் தெரிகிறது.

படுகாயமுற்ற ஆர். முரு கையா கத்திவெட்டு காயங் களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### ...டரில் புகைபிடித்த ...வருக்கு அபராதம்

செய்யப்பட்டனர். இவர்க ளில் 6பேர் தங்கள்மனைவிய ருடன் படம் பார்த்துக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டு வெளியே கொண்டுவரப்பட்டதாக வும் சம்பந்தப்பட்ட அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

தியேட்டரில் புகைபிடித்த குற்றத்துக்காக இருவருக்கு யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் நேற்றுமுன் தினம் அபராதம் விதிக்கப்பட் டதும் குறிப்பிடத்தக்கது. [ஈ. நி.]

### பஸ் ஆற்றில் பாய்ந்தது
### 60 பேருக்கு காயம்

கேகாலை, திங்கள் பாதையை விட்டு விலகி ஆற்றில் பாய்ந்த இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணஞ் செய்த 60 பியாணிகள் காயமுற்றனர். கேகாலையி லிருந்து கண்டிக்குப் புறப் பட்ட இந்த பஸ், மாவனல் லையில் பாதையை விட்டு விலகி ஹிங்குலு ஓயாவில் பாய்ந்தது.

படு காயமுற்ற 20 பிர யாணிகளும் கண்டி பெரி யாஸ்பத்திரிக்கு விரைவுப் பட்டனர். மிகுதி 40 பேரும் மாவனல்லை கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டனர்.

வளைவு ஒன்றில் திரும்பு கையிலேயே இந்த பஸ் பாதையை விட்டு விலகி, ஆற்றில் பாய்ந்ததாகத் தெரிகிறது. மாவனல்லைப் பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

### குன்றக்குடி அடிகள் வருகிறார்

திருக்கோணமலை, திங்கள் திருவண்ணாமலை 45வது ஆதீனத்துக் குரு சந்நிதா னக் குரு குன்றக்குடி அடிக ளார் திருக்கோணமலை அருள்நெறி மன்ற அழைப் பின் பேரில் இலங்கை வர விருக்கிறார். மேற்படி மன் றத்தின் ஆதரவில் திருக் கோணமலை ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஆலய முன்ற லில் இம்மாதம் 15, 16, 17ந் தேதிகளில் நடக்க விருக்கும் திருமறைவிழா வில் கலந்துகொள்ளும் இவர், மலையகத்தில் இரு தினங்களும், யாழ்ப்பாணத் தில் இரு தினங்களும் சொற்பொழிவாற்ற ஏற்பா டாகியுள்ளதாகத் தெரிகின் றது. அடிகளாரை அழைக்க விரும்புபவர்கள் திருக் கோணமலை அருள்நெறி மன்றச் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

### அபராதம்

யாழ்ப்பாணம், செவ். நடுக்கட்டு உத்தியோகத் தர்களைவேலைசெய்யவிடாது தடுத்ததென்ற குற்றச்சாட் டின் பேரில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒருவருக்கு 15 ரூபா குற்றம் விதிக்கப் பட்டது. தெல்லிப்பழை பட் டினசபைக்கு கட்டவேண் டிய வரியைச் செலுத்தாத தால், மேற்படி பட்டின சபை நடுக்கட்டு உத்தி யோகத்தர்கள் அவரது வீட் டுத்தளபாடங்களை எடுக்கச் சென்றபோது அதைத் தடுத்து, அவர்களை வேலை செய்யவிடாது மறித்ததாக இவ்வழக்கில் வேலாயுதம் என்பவர் மீது குற்றம்சாட் டப்பட்டிருந்தது. [ஈ. நி]

### திருட்டு

புலோலி, திங்கள் மந்திகை அரசினர் வைத் தியசாலையில் சைக்கிள் கள் வர் நடமாட்டம் அதி கரித்துள்ளதாகத் தெரி கிறது. நேற்று முன்தினம் துன்னாலையைச் சேர்ந்த ஒருக்கள் ஒருவரின் சைக் கிள் ஒன்று திடீரெனக் காணாமல்போய்விட்டதாம். இதுசம்பந்தமாக பொலிஸி ல் புகார்செய்யப்பட்டுள் ளது.

### காங்கிரஸ் அபேட்சகர்கள்பற்றி 14ல் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட விரும்புவோர்க ளிடமிருந்து விண்ணப்பங் கோர தமிழ்காங்கிரஸ் கமி ட்டி தீர்மானித்துள்ளது. விண்ணப்பங்கள் நாளைநடை பெறவிருக்கும் தமிழ்காங்கி ரஸ் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் அபேட்ச கர்கள் போட்டியிட தேர்ந் தெடுக்கப்படுவார்கள்.

சில கம்யூனிஸ்ட்கட்சியும் சிலவட்டாரத்தில் போட்டி யிடப்போவதாகவும்கட்டர சுக் கட்சியைச்சேர்ந்த வர்கள் 8 வட்டாரத்தில் போட்டியிட இருப்பதாகவும் தெரியவருகின்றது. [ந. நி]

—

### புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள் ஒலுமடு கருதாவற்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்க வருடாந்தக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது புதுவருட நிர்வாகி களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் வ. அம்பலவா ணர், உபதலைவர்: இ. கந் தையா, காரியதரிசி: ப. சிதம்பரப்பிள்ளை. நிர்வாகி கள்: ஞா. நடராசா, ச. வல்லிபுரம், க. வேலுப் பிள்ளை, இ. அப்புத்துரை, வ. ஏரம்பு, ஐ. வைத்திலிங் கம்.

—

### கல்முனையில் ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி) டாரின் வீதியிலுள்ள சுதந் திரக்கட்சிக் காரியாலயத்தி லிருந்து கல்முனை நோக்கிப் புறப்படும். ஊர்வலத்திற்கு ஜனாப் பதியுதீன்மாமூத் தலைமை வகிப்பார். இதில் திருமலை, கிண்ணியா, சின் னக்கிண்ணியா ஆகிய ஊர் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

காலியிலிருந்து புறப்படும் ஊர்வலம் களுத்துறை, கட் டுக்குருந்தை, பேருவளை, அளுத்கம ஆகிய இடங்கள் ஊடாக மஹ்மூத் நகரை வந்தடையும். கொழும்பு, காலி, வெலிகமை ஆகிய இடங்களிலிருந்து வரும் பிரதிநிதிகள் ஏறாவூரில் வர வேற்கப்படுவர். அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

5 ஏக்கர் விஸ்தீரணத்து டன் மாநாடு நடக்க ஏற் பாடு செய்துள்ள இடத்தில் வெளியூர்ப் பிரதிநிதிகள் தங்குவதற்கான 20 தற் காலிக கட்டிடங்கள் அமைக் கப்பட்டுள்ளன. பெண் களுக்கான கட்டிடத்திற்கு 'மர்ஹூம்ஜெமிலா மன்ஸில்' எனப் பெயர் சூட்டப்பட் டுள்ளது. 14-ந் திகதி காலை கல்முனை வாடிவீட்டி லிருந்து முன்னணித் தலை வர் ஜனாப் பதியுதீன்மாமூத் மகாநாட்டுக்கு ஊர்வல மாக அழைத்துவரப்படு வார்.

16-ந் திகதி நடைபெறும் மகாநாட்டில் பிரதம விருந் தினர்களாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. அமைச்சர் சேனநாயகா, திரு. பி. பி. இலங்கரத்ன, டாக்டர் என். எம். பெரேரா, ... ... ... கலந்து கொள்வர்.

### பரிசளிப்பு விழா

சுழிபுரம், திங்கள் வழக்கம்பரை மஜீனச் சபையினரால் நடாத்தப் பட்ட சிவபுராணப்போட்டி யில் வெற்றி பெற்றவர்களு க்குவருகிறவெள்ளிக்கிழமை பரிசுகள் வழங்கப்படவிருக் கின்றன. பரிசளிப்பு விழா திரு. க. சீனிவாசகம் ஆசிரி யர் தலைமையில் நடைபெ றும்.

—

### சுகாதாரப் படக்காட்சி

உடுப்பிட்டி, திங்கள் அல்வாய் வட்டாரச் சுகா தார விழாவை முன்னிட்டு அப்பகுதிச் சுகாதாரப் பரி சோதகர் திரு. எஸ். சண் முகம்பிள்ளை முயற்சியி னால் சுகாதாரப் பகுதியின ரின் இலவச சுகாதாரப் படக் காட்சி மாலி சந்திப் பிள்ளையார் கோவில் முன்ற லில் காண்பிக்கப்பட்டது. இப்படக்காட்சிக்கு யாழ். மாவட்ட சுகாதாரப் பிர சாரகர் திரு. கே. பாலசுப் பிரமணியம் தலைமைவகித் தார்.

—

### பயிற்சி வகுப்பு

பூநகரி, செவ்வாய் இன்று காலை 9 மணிக்கு பூநகரி கிராமசபை மண்ட பத்தில் கமக்காரர் பயிற்சி வகுப்பொன்று நடைபெற விருக்கின்றது. யாழ். மாவ ட்ட உதவி அரசாங்க அதி பர் திரு. முருகேசம்பிள்ளை யும், மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத் தர் திரு. ஜெயசீலனும் இங்கு கலந்து உரையாற்று வர்.

—

### இடமாற்றம்

பூநகரி, திங்கள் மன்னார் சென் சேவேஸ் மகளிர் ஆங்கில பாடசாலை யில் விஞ்ஞான ஆசிரியை யாகக் கடமையாற்றிய த. லோகேஸ்வரி பூநகரி மகா வித்தியாலயத்திற்கு இட மாற்றம் பெற்றுள்ளார்.

—

### கதம்பவிழா

பூநகரி, திங்கள் பல்லவராயன்கட்டு சைவப்பாடசாலை பெற்றார் தினவிழா அண்மையில் திரு. வே. கார்த்திகேசு தலைமை யில் நடைபெற்றது. திரு. ஏ. கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற கதம்பவிழா வின்போது ஏழாலை கந் தோவிக்கவாலிபர் சங்கத் தினரின் 'கைவிரல்கள்' என் னும் சமூக நாடகமும் நடை பெற்றது. திருமதி கதிர் காமர் வெற்றிபெற்ற வீரர் களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

—

### ஆஸ்பத்திரியில் தண்ணீர் கஷ்டம்

வவுனியா, ஞாயிறு வவுனியா அரசினர் வைத் தியசாலையில் தண்ணீர் இறைக்கும் 'பம்ப்' பழுத டைந்து சுமார் 6 மாதங்கள் ஆகின்றன. நோயாளர்கள் தண்ணீர் பெறுவதில் கஷ்ட மடைகின்றனர்.

—

### தபால் இலாகாவுக்கு ஏற்படும் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ். தபால் இலாகாவினரால் வெளியிடப்பட்ட சுற்று நிருபமொன்றில், சில அஞ் சல் நிலைய அதிபர்கள் பகர நிதி விடுமுறைத் திரட்டுக ளுடன் அனுப்பப்பட வேண் டிய சம்பளமில்லாத அரை நாள் முழுநாள் விடுமுறை தினங்களின் விபரங்களை அனுப்புவதில்லை யென்பது அவதானிக்கப் பட்டுள்ளதா கவும் இதனால் தபால் இலா காவுக்கு பல கஷ்டம் ஏற்ப டுவதாகவும் சுட்டிக் காட் டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. [ந. நி]

### நாடும் நடப்பும்

"யாழ்ப்பாணப் பட்டினத் துக்கு படம் பார்ப்பதற்காக பக்கத்துக் கிராமங்களிலிருந் தெல்லாம் ரசிகர்கள் வருகி றார்கள். பட்டினத்திலிருக் கும் நாங்கள் ஒரு நாளைக்கு பட்டினத்துக்கு வெளியே இருக்கும் ஒரு தியேட்டருக் குப் போய்ப்படம் பார்த் தால் என்ன?

இந்தக் கேள்வியுடன் ஒரு நண்பர் அழைத்தார். இந் நாளில் வரும் படங்களில் ஏனோ எனக்குஒரு வெறுப்பு. என்றாலும் நண்பருடன் புறப்பட்டேன். படம்பார்த் தாலும் பார்க்காவிட்டா லும் வரைச் சுற்றவேண்டி யதும் எனது வேலையல்லவா?

அதிகதூரம் போகவில்லை. அருகேயுள்ள மானிப்பாயில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'வெள்ளி தியேட்டரு'க்கே சென்றோம். படத்தைப் பார்ப்பதைவிட புதிய தியேட்டர் எப்படியிருக்கிற தென்பதைப் பார்ப்பதில் மகிழ்ச்சி. தியேட்டருக்கு வெளித்தோற்றம் இல்லை. தியேட்டர் இருப்பதாகவே வெளியிலிருந்து பார்க்கும் போது தெரியாது. தியேட் டரின்உள்தோற்றம் நன்றாக இருக்கிறது. ஒலி, ஒளி, காற்று வசதி, ஆசன வசதி கள் நன்றாக அமைக்கப்பட் டுள்ளன. திரையும் நல்ல முறையில் அமைக்கப்பட் டுள்ளது. தியேட்டர் மனே ஜரும் ஊழியர்களும் ரசிகர் களுடன் நல்லமுறையில்பண் போடு பழகுகிறார்கள்.

நாங்கள் அங்கு பார்த்த படம் 'கார்த்திகைத் தீபம்'. பல படங்களில் வில்லனாக வரும் அசோகன் இதில் கதா நாயகன். நல்லமுறையில் நடித்திருக்கிறார். தாய்மை அடைந்தால் இறந்துவிட வேண்டியதுதான் என்ற அர்த்தமற்றபயத்தினால் ஒரு கன்னி நடத்தும் மனப்போ ராட்டத்தைக் கருவாகக் கொண்டது 'கார்த்திகைத் தீபம்'. லீலாவதி, விஜயன், வசந்தா ஆகிய புதுமுகங் களே இப்படத்தில் நடிக்கின் றனர். தமிழ்த் திரைப்படத் துக்கே உரித்தான சிலகுறை களிருந்தாலும் நடிக நடிகை யரின் நடிப்பிலோ, காட்சி அமைப்புகள், டைரக்ஷன் ஆகியவைகளிலோ குறை சொல்வதற்கில்லை. நல்ல பாடல்களும் உண்டு.

பட்டினத்துக்கு வெளியே ஒரு நல்ல தியேட்டரில் 'விசில்', 'ஊய்' சத்தமில்லா மல் நல்ல ரசிகர்கள் மத்தி யில் சில மணி நேரத்தை கழித்த நிம்மதியுடன் திரும் பினேன்.

—ஊர்சுற்றி

—

### அன்னதானம்

காலி, திங்கள் கதிர்காமம் சென்ற யாத் திரிகர்களுக்கு காலியிலு ள்ள கலுவெல ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வர ஆலயமடம் வழமைபோல் இம்முறையும் அன்னதானம் வழங்கியது.

—

### மண்டலாபிஷேகம்

உடுப்பிட்டி, திங்கள் கரணவாய் வடக்கு நவிண் டில் சக்கலாவத்தை ஞான வைரவர் ஆலயமகாகும்பா பிஷேக விழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. இரு தா. பொன்னம்பலத்தின் சங்கீத கதாகாலட்சேப நிகழ்ச்சியும்நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தரமான இலக்கியம் படைக்க மொழிவளமும் அவசியமாகும்

## கிறிஸ்தவ மாணவ மகாநாட்டில் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.

"இலங்கைத் தமிழ்மக்கள் இலக்கியத்துறையில் எவ்விதத்திலும் தமிழகத்தாருக்குச் சளைத்தவர்களல்ல. தமிழகத்துக்கும் வழிகாட்டிய இலக்கிய வித்தகர்கள் ஈழத்தவரே. ஆனால் இளம் சந்ததியினர் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் இருந்து இறக்குமதியாகும் ஆபாச இலக்கியங்களை மனம் போனபடி வாங்கிப்படிப்பது மிகவும் வருந்தத்தக்குரியதாகும்".

இவ்வாறு 'சிறுகதை இலக்கியம்' பற்றிப் பேசுகையில் திரு நாவேந்தன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இம்மாநாடு வண. எஸ். அருளம்பலம் தலைமையில் நடைபெற்றது. திரு. நாவேந்தன் தொடர்ந்து பேசியதாவது:—

தரமான இலக்கியத்தைப் படைப்பதற்கு மொழிவளமும் இலக்கியப்பயிற்சியும் அவசியம். மலிவு விலைக்குக் கிடைக்கும் தரமற்ற இலக்கியப்படைப்புகளினால் மொழி வளமோ, மனவளமோ கிடைக்கப்பெறாது. ஈழத்தில் தலைசிறந்த சிறுகதை ஆசிரியர்களின் நூல்களை இளஞ்சந்ததியினர் அவசியம் படிக்க வேண்டும்.

இம்மகாநாட்டில் நாடக வளர்ச்சிபற்றி 'நிர்மலா' திரைப்பட டைரக்டர் திரு. ஏ. அருமைநாயகமும், இசை வளர்ச்சி பற்றி வண. வில் அக்பிரா, திருமதி டாக்டர் சேதுராசா ஆகியோரும் பேசினர். [எ. ந.]

## அரிக்கன் லாந்தரில் அரசாங்க அலுவல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலுள்ள பஸ் தரிப்புகளில் கடமையாற்றும் 'டைம் கீப்பர்கள்' இரவு நேரங்களில் தமது அலுவல்களைச் செய்வதில் மிகவும் கஷ்டத்துக்குள்ளாவதாகத் தெரியவருகிறது.

இந்த பஸ் தரிப்புகளுக்குள் பிரயாணிகளுக்கு மட்டும் வெளிச்சம் இல்லாதிருப்பதோடு டைம்கீப்பர்களுக்கும் போதிய வெளிச்சம் இல்லாததால் இவர்கள் மிகுந்த கஷ்டத்துடன் தமது அலுவல்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. மங்கிய அரிக்கன் லாந்தரின் துணை கொண்டே இங்குள்ள டைம்கீப்பர்கள் இரவு நேரங்களில் தமது அலுவல்களை கவனிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறார்கள்.

—

## அல்வாயில் சுகாதார விழா

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் மனோகரா ஜன சமூக நிலைய ஆதரவில் அல்வாயில் சுகாதார விழா கொண்டாடப்பட்டது. டாக்டர் எஸ். புவிராஜசிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார். இவ்விழாவில் திருவாளர்கள் ஜே. எஸ். செல்லப்பா, ஆர். எஸ். செல்லத்துரை, தணிகாசலம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி புவிராஜசிங்கம் பரிசில்கள் வழங்கினார். நாடசாலைக்குத் தம்ப நிகழ்ச்சிகளில் அல்வாய் ஸ்ரேமன் கத்தோலிக்க பாடசாலை அதிக புள்ளிகளைப் பெற்று வெள்ளிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
ரவிச்சந்திரன் - விஜயா
மாலினி - ஷீலா - ஸ்ரீராம்
நடித்த
இதயக்கமலம்



யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வி யோகநாயகி சென்னை கர்நாடக சங்கீத மத்தியகல்லூரியினரால் நடத்தப்பட்ட சங்கீத வித்துவான் பரீட்சையில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்து தங்கப்பதக்கம் பரிசாகப் பெற்றுள்ளார். இவ்வருடப் பரீட்சையில் இலங்கையில் சித்தியடைந்த மூவரில் வீணையில் இவர் மட்டுமே சித்தியடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஏற்கனவே கர்நாடக சங்கீத நாடக சங்கம் நடத்திய போட்டியிலும் வெள்ளிப்பதக்கத்தை இவர் பெற்றுள்ளார். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான செல்வி யோகநாயகி திருநெல்வேலியைச் சேர்ந்த வழக்கறிஞர் சிவசுப்பிரமணிய தம்பதிகளின் புதல்வியாவார். [வ. நி.]

—

## சுப்பீரியராகத் தெரிவு

மட்டக்களப்பு, திங்கள்

அகில இலங்கை புனித சூசையப்பர் சபையின் சுப்பீரியராக பதவி வகித்த வண. சகோ. இம்மானுவேல் எஸ். எஸ். ஜே. ஓய்வு பெறுவதை முன்னிட்டு நடைபெற்ற புதிய சுப்பீரியர் தெரிவில் ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த வண. சகோதரர் தோமஸ் புதிய சுப்பீரியராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 25 வருடங்களுக்கு மேலாக துறவற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளார். ஹட்டன் புனித பொஸ்கோ கல்லூரியின் அதிபராகவும் இவர் கடமையாற்றுகிறார்.

இன்று மட்டும்
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30 9-30
அசோகன் — லீலாவதி
நடித்த
கார்த்திகை தீபம்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி
2-30, 6-30, 9-30 மணி
போயா தினங்களில்
காலை 1030 மணி
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
உயிர்மேல் ஆசை

?வது வாரம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Rock Hudson
George Peppard
in
TOBRUK

## இன்றைய பலன்

(13 - 8 - 68)

ஆடி 29 உ

செவ்வாய்க்கிழமை

திதி- பஞ்சமி மாலை 5-11 மேல் ஷஷ்டி.

நட்சத்திரம்- ரேவதி இரவு 10-54 மேல் அச்சுவினி.

ராகுகாலம் - 3-04 4-34.

சுபநேரம் - 10-34— 12-04.

இன்று பிறந்தவர்களுக்கு— பூகம்பமே வெடித்துவிடும் போல் தோன்றும் சம்பவங்கள் முடிவில் புஸ்வாணமாகிவிடும். எதிரிகள் இருப்பினும் அவர்களின் முயற்சிகள் படுதோல்வி அடையும். கடற்றொழிலாளர்களுக்கு வருவாய் குறையலாம். காய்கறி உற்பத்தியாளர்கள் இலாபமடைவர் விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள் கிடைக்கலாம். சிலருக்குப் பித்தம்சம்பந்தமான ரோகங்கள் தென்படலாம். பெரியவர்களின் பேச்சைக் கேட்டு நடந்து கொள்ளவும். அறவழி நடப்பின் அனைத்திலும் வெற்றி உமக்கே உண்டு.

மேஷம்- நம்பிக்கை நலன் தரும், வாழ்வில் உயர்வு.

ரிஷபம்- தென்றலும் தீயாக மாறும், திருடர் பயம்.

மிதுனம்- வாகன விருத்தி, வாழ்விலும் திருப்தி.

கடகம். நல்லெண்ணம் வளரும், நலிவும் நீங்கும்.

சிம்மம்- வேவுக்கணை தொடுப்பர், விழிப்புடன் இரு.

கன்னி- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இருக்கும்.

துலாம்- விவாத நஷ்டம், வீண்பெயர் கேட்டல்.

விருச்சிகம்- உற்றார் உறவு, உபசெலவு.

தனுசு- தொழில்நலன், தொடர்புகள் பெருகும்.

மகரம்- ஊக்கமிகுதி, உழைப்பால் உவகை.

கும்பம்- மனப்போராட்டம், இளக்குறை.

மீனம்- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 13—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

844 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேலை, 8-15 இன்னிசைகீதங்கள்.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 சுதம்ப இசை.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்:

இரவு 6-15 தமிழோசை நாடகம், 6-30 விளையாட்டு விமர்சனம், 6-45 பாவனம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 பாட்டு — எஸ். சண்முகராசவேல்.

## நெசவுத்துறையில் நாடு முன்னேற...

உடுப்பிட்டி, திங்கள்

இலங்கையில் அரசாங்கம் வியாங்கொடை முதலிய மூன்று இடங்களில் விசைத்தறிகளை உருவாக்கியுள்ளதாகவும், நெசவுத்தொழில் அபிவிருத்திக்கு முன்னோடியாக இவ் விசைத்தறிகள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் கைத்தறிக்கும் விசைத்தறிக்குமிடையே ஏற்படும்போட்டி நெசவுத்தொழிலைப் பாதிக்காது இருப்பதற்காக அரசாங்கம் தீவிர ஆலோசனை செய்து வருவதாக உப சபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இந்தியாவிலே கைநெசவுக்கும், விசைத்தறிகளுக்குமிடையில் எவ்வித துணிகளை உற்பத்திசெய்ய வேண்டுமென்பதில் சரியான முடிவுக்கு வராததால் அங்கே ஒரு கஷ்டமான சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும், நல்லவேளையாக இலங்கையில் இவ்வித நெருக்கடி தோன்றவில்லையெனவும் தெரிவித்த திரு. சிவசிதம்பரம், கைத்தறியிலும், விசைத்தறியிலும், நெசவுசெய்யவேண்டிய துணி வகைகள் எவையென ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் இலங்கை விரைவில் ஒரு நெசவு நாடாகிவிடுமென்றும் கூறினார்.

—

## மேலதிக நீதிபதியாக நியமனம்

காலி, திங்கள்

காலியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. சந்திரா அமரசிங்க ஆகஸ்ட் 15ம் திகதி முதல் அநுராதபுர மேலதிக நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காலி வழக்கறிஞர் சங்கச் செயலாளராகவும் காலி வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு நிர்ணயசபைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். சட்டக்கல்லூரியில் சேர முன் திரு. சந்திர அமரசிங்க பத்திரிகையாளராகவும் இருந்தார்.

—

## மலேரியாவுக்கு பெண் பலி

சாவகச்சேரி, திங்கள்

மலேரியாவினால் பீடிக்கப்பட்ட மட்டுவில் தெற்கு வாசியான இளம்பெண் ஒருவர் பரிதாபமாக மரணமானார். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இராசையாவின் 21 வயதுப் புதல்வியான கமலம் என்பவரே இவ்வித மரணத்துக்குள்ளானவராவார். மலேரியா என அறியாது பெற்றோர் கவலையீனமாக இருந்தமையாலேயே இவ்வித மரணம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

—

## தீக்குளிப்பு

அல்வைப்பிட்டி, திங்.

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய உற்சவத்தின்போது தீக்குளிப்பு நடைபெற்றது. கடந்தவருடங்களிலும் பார்க்க இம்முறை அநேக பக்தர்கள் தீமிதிப்பில் ஈடுபட்டனர்.

—

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு புகையிரத நிலையத்துக்கருகாமையில் ஸ்ரோர்கீப்பர் ஒருவரின் வீட்டில் வானொலி, சைக்கிள், மேசைக் காற்றாடி ஆகியவை திருடப்பட்டுவிட்டதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (கட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோ)
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
நடித்த

ஸ்ரீ விநாயகா
பிக்சர்ஸ்
நான்

கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறைப்பகுதி

## விளையாட்டுக் கழகசமாஜ விளையாட்டு விழா

அளவெட்டி, திங்கள்

வலி-வடக்கு காங்கேசன் துறைப் பகுதி விளையாட்டுக் கழக சமாசத்தின் 2-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. காங்கேசன்துறைப் பட்டின சபை மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இவ்விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து இம்மாத இறுதிவரை நடைபெறுமென மேற்படி சமாசக் காரியதரிசி கி. கந்தசாமி தெரிவித்தார்.

முதல் நிகழ்ச்சியான 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் கட்டுவன் பாலர் ஞானோதய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வன் வி. சிவபாலன் முதலிடத்தைப் பெற்றார்.

20 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் காங்கேசன் துறை இளந்தமிழர் மன்றத்தைச் சேர்ந்த கே. செல்வராசா முதலாவதாக வந்தார்.

கட்டுவன் பாலர் ஞானோதய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி வி. இராஜேஸ்வரி பெண்களுக்கான 4 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றார். போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் பின்வருமாறு:

5 மைல் மரதன் ஓட்டம்: வி. சிவபாலன் (கட்டுவன் பாலர் ஞானோதய வி. க.) சி. சாம்பசிவமூர்த்தி [மாவை வி. க] ரி. செல்வராசா, [காங். இளந்தமிழர் வி. க] என். தாமோதரம்பிள்ளை, [கணேசா வி. க.] என். சின்னராசா [கீரிமலை வி. க]

4 மைல் சைக்கிள் ஓட்டம் பெண்கள்: வி. இராஜேஸ்வரி [குரும்பசிட்டி பாலர் ஞானோதய வி. க], வி. சுந்தி [வை. எம். டி. ஏ, வி. க. கே. நந்தாவதி [வை. எம். டி. ஏ. வி. கழகம் காங்கேசன்துறை.]

20 மைல் சைக்கிள் ஓட்டம் ஆண்கள்: கே. செல்வராஜா [இளந்தமிழர் வி. க] கே. குணராசா [பாலர் ஞானோதய குரும்பசிட்டி] வி. பாலசுப்பிரமணியம் [கணேசா வி. க] கே. பாலசிங்கம் [இளந்தமிழர் வி. க] ரி. ஆனந்தராசா [வை. எம். டி. ஏ. வி. க.]

கரபந்தாட்டம்

விழாவை யொட்டி கரபந்தாட்டப்போட்டி ஒன்றும் நடைபெற்று வருகிறது. இதில் வெற்றிபெறும் கழகத்திற்கு காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. த. சதாசிவத்தின் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும்.

இதுவரை நடைபெற்ற போட்டிகள் பின்வருமாறு:-

தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், காங்கேசன்துறை யுனைட்டெட் விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்டதில் தையிட்டி ஸ்ரார் இருபோட்டியிலும் வெற்றிபெற்றது.

காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டுக் கழகத்துக்கும் காங்கேசன்துறை குரு விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற ஒரு போட்டியில் இரு போட்டிகளிலும் அபிவிருத்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும், காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2—1 புள்ளியால் வெற்றி பெற்றது.

காங்கேசன் யுனைட்டெட் விளையாட்டுக்கழகமும், காங்கேசன் குரு விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்டதில் யுனைட்டெட் மிகத் திறமையாக விளையாடி 2—1 புள்ளியால் குருவிளையாட்டுக்கழகத்தைவெற்றிவாகை சூடியது. காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்றஇப்போட்டிக்கு திரு. எம். சிவரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

## மாட்டு வண்டிப் போட்டி

சுழிபுரம், திங்கள்

பொன்னாலையில் முதல் முறையாக மாட்டு வண்டிப் போட்டி இம்மா நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றது. பொன்னாலை வயல் வெளிக்கருகாமையில் இருக்கும் குளக்கரையில் போட்டி நடைபெறவிருக்கின்றது.

## ச. ச. நிலையம் தீக்கிரையானது

இராமநாதபுரம், திங்.

இராமநாதபுரம் 7ம் யூனிட்டிலுள்ள சர்வோதய சன சமூக நிலையம் கடந்த வியாழனன்று தீக்கிரையானது. இதுசம்பந்தமாக ஐவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## பலாலி வென்றது

உரும்பராய், திங்கள்

பலாலி மகாஜனா ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் வருடாந்த உதைபந்தாட்டம் இவ்வருடம் மகாஜனாவை ஆசிரியபயிற்சிக்கலாசாலை நடைபெற்றது. நடைபெற்ற ஆட்டத்தில் பலாலி இரண்டு கோல்களால் மகாஜனாவைத் தோற்கடித்தது. மகாஜனா ஒருகோலும் போட முடியாமல் தடுத்தபெருமை பலாலி காப்பாளர் சு. பாலசுந்தரத்தையே சாரும். இடைவேளைக்கு முன்னர் இரு தரப்பினரும் ஒரு கோல் போடவில்லை. இடைவேளைக்குப் பின்பு, ஆட்டம் மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. ——

## மரதன் ஓட்ட முடிவு

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெறும் விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக, மரதன் ஓட்டம், இருபது மைல் சைக்கிள் ஓட்டம் முதலிய போட்டிகள் நடைபெற்றன இப்போட்டிகளில் இருபதுக்குமேற்பட்ட விளையாட்டுக் கழக வீரர்கள் கலந்து கொண்டனர்.

போட்டி முடிவுகள் மரதன் ஓட்டம்: இ. இராசேந்திரன் (அரசடி சன சமூக நிலையம்), இ. திருநாவுக்கரசு (அ. ச. ச. நி.), பி. கனகரத்தினம் (அ. ச. ச. நி.), ஏ. இராசேந்திரன் (அராலி சரஸ்வதி), பி. கனககுலசிங்கம் (அ. ச. ச. நி.).

சைக்கிள் ஓட்டம் 20மைல்: க. மகிபநாயகம் (பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ.), தி. குணரத்தினம் (அ. ச. ச. நி.), ஜே. ஆர். கனகராசா (அராலி சரஸ்வதி).


# பல மடங்கு பயன் பெற பாவியுங்கள்

# திறீ றோஸஸ்




தரத்தை நாடும் புகை பிடிப்பாளர், வேறெதைக் கொடுத்தாலும் விட்டு மாற விரும்பாத சிறப்புகள் சில உண்டு. சுவை அவற்றில் ஒன்று — செறிந்த சுவை! நேர்த்தியான புகையிலைக் கலவை மற்றது. அதுவே உண்மையான திருப்தி தரும் புகைபிடி இன்பத்தை எப்போதும் அளிப்பது.

இந்தச் சிறப்பெல்லாம் சேர்ந்த ஒரே சிகரெட்தான் — திறீறோஸஸ்

அது இலங்கையின் அபிமான சிகரெட்டாகத் திகழக் காரணம் அதுவே!

தரத்தை நாடுவோர் அதை விடச் சிறப்புக் குறைந்ததை நாடாமலிருக்கக் காரணமும் அதுவே!

திறீ றோஸஸ் முழுநிறைவும் சுவையான முழுத் திருப்தி தரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று எதிரிகளுக்கும்

# கொலை, திருட்டு வழக்கில் தலா 15 வருட கடூழியம்

காலி, திங்கள்

தில்லை—வெலிகந்தையைச் சேர்ந்த திருட்டு கொலைவழக்கில் எதிரிகள் மூவருக்கும் தலா 15 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையை காலி அசைஸ் நீதிபதி திரு. ஏ. எல். எஸ். சிறிமானே விதித்தார்.

இவ்வழக்கில் புஞ்சிசில்வோ என்பவருக்குச் சொந்தமான 11,000 ரூபா பெறுமதியான காசோலையை அபகரித்ததாகவும் புஞ்சிசில்வோவைக் கொலை செய்ததாகவும் வாதுவே சாரிஸ், ஏ. குணபால, எம். அபேபால ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் பின்னர் எதிரிகள் குற்றவாளிகள் என ஜூரிகள் 15 நிமிட ஆலோசனையின் பின்னர் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரிகள் மூவருக்கும் கைமோசக் கொலைக் குற்றத்துக்காக தலா 8 வருடமும், கொள்ளைக் குற்றத்துக்காக தலா 7 வருடமுமாக மொத்தம் 15 வருடம் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டதாக தீர்ப்பு முடிவில் நீதிபதி திரு. சிறிமானே தெரிவித்தார்.

## "ஒற்றுமை தான் முக்கியம்"

கல்முனை, திங்கள்

"இலங்கையில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே எனது விருப்பம். இலங்கா நாடு இஸ்லாமிய சமூகத்தினிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தி முன்னேற்றத்தைக் கொடுக்குமெனக் கருதுகின்றேன்".

இவ்வாறு கல்முனை எம். பி.யும், நகரசபைத் தலைவருமான ஜனாப் எம். ஸி. அகமத், இஸ்லாமிய சோசலிஸ முன்னணியின் இரண்டாவது மகாநாட்டுக் குழுவினருக்கு அனுப்பி வைத்துள்ள ஆசிச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் சம்பந்தமாக அரசியல், பொருளாதார, சமூக, கல்வி, கலாச்சார துறைகளைப் பாதிக்கும் விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து ஆணித்தரமான முடிவுகளை எடுப்பதற்கு கட்சி வேறுபாடின்றி ஒன்றுசேருமாறு முஸ்லிம்கள் அனைவரையும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# "எதிரிகள் கத்திகளுடன் நிற்பதைக் கண்டேன்"

### அல்லாரைக் கொலை வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, திங்கள்

"சம்பவ தினம் காலை 8-30 மணிக்கு நான் வீட்டில் நின்றபோது தோட்டத்தில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. எனது கணவர் தோட்டத்திற்குச் சென்றிருந்தபடியால் நான் தோட்டப்பக்கமாக ஓடினேன்; அங்கு 3-ம் எதிரி பஞ்சாட்சரம் மரவள்ளிச் செடிக்குள்ளால் ஓடினார். நான் கிணற்றடியில் நின்று பார்த்தபோது 1-ம் 2-ம் 4-ம் 5-ம் 6-ம் எதிரிகள் ஒழுங்கையிலும் ரோட்டிலும் கொட்டன் கத்திகளுடன் நிற்பதையும் கொலையுண்ட ராமு கார்த்திகேசு பனந்தம் செடிக்கருகே கிடப்பதையும் கண்டேன். எனது கணவர் கார்த்திகேசுவும் விஜிதத்தம்பியும் தலையில் கையை வைத்தபடியிருந்தனர்."

அல்லாரைக் கொலைவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட போது சாட்சியமளித்த கார்த்திகேசு பென் சிவக்கொழுந்து மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் மேமாதம் 8-ம் திகதி அல்லாரையில் ராமு' கார்த்திகேசு அல்லது செல்லையா அல்லது மாத்தயா என அழைக்கப்படும் கார்த்திகேசுவை தோட்டத்தில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த சமயம் துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்ததாக அல்லாரையைச் சேர்ந்தவர்களான மு. தில்லையம்பலம், த. காசிநாதர், த. பஞ்சாட்சரம், வை. நாகநாதி, வ. சின்னத்தம்பி, மூ. கனகசபை ஆகிய ஆறுபேர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் புறக்டர்கள் திரு. கே. திரவியநாயகம், திரு. எஸ். பி. மயில்வாகனம் ஆகியோரின் அநுசரணையுடன் பரிஸ்டர் எம். சிவானந்தன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் சாவகச்சேரிப் பொலிஸாருடனும் புரக்டர் வி. செல்லத்தம்பியினதும் அநுசரணையுடன் அட்வகேட் திரு. எம். ஜெயக்கொடி வழக்கை நடத்தினார்.

கொலையுண்ட கார்த்திகேசுவின் மனைவி சிவகாமிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் நான் வீட்டிலிருந்தபோது சுப்பிரமணியம் என்பவர் வந்து உன் கணவர் கார்த்திகேசுவைச் சுட்டுப்போட்டார்கள் என்று கூறினார். நான் யார் சுட்டதெனக் கேட்டபோது 'போய்த் தோட்டத்தில் கேள்' என்று கூறிவிட்டு ஓடிச்சென்றார். எங்கள் வீட்டிலிருந்து கால் மைல் தூரமுள்ள தோட்டத்திற்கு நான் சென்றபோது கணவர் கார்த்திகேசு நிலத்தில் கிடந்தார். விஜிதத்தம்பியும் கார்த்திகேசுவும் நின்றனர்.

மேல் விசாரணை இம்மாதம் 24-ந் திகதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

## மாங்குளம் முக்கொலைவழக்கு

வவுனியா, திங்கள்

மாங்குளம் முக்கொலை வழக்கு விசாரணை நேற்று வவுனியா மேலதிக மாஜிஸ்திரேட் திரு. சின்னத்தம்பி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதுவிசாரணை இம்மாதம் 27-ம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

## சிவலோகநாதன் மர்மமரணம்

### நால்வரை பொலிஸார் தேடுகின்றனர்

வவுனியா, திங்கள்

ஓமடிசுமிட்டான் விவசாயப்படையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவலோகநாதன் என்ற இளைஞனின் மர்ம மரணம் சம்பந்தமாக 7 பேர் நேற்று பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டனர். இதுசம்பந்தமாக மேலும் நால்வரை பொலிசார் தேடிவருவதாக தெரிகிறது.

பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். தம்பிராசா நேற்று முல்லைத்தீவில் இந்த விசாரணையை நடத்தினார்.

## விதிவிலக்கு இல்லை?

கொழும்பு, திங்கள்

இலங்கையிலிருந்து இந்தியா செல்பவர்களுக்கு அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பதில்லையென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

கடந்த ஜூன்மாதம் இலங்கை அரசாங்கம் அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டத்தை அமுல் நடத்த ஆரம்பித்ததிலிருந்து, இந்தியப் பிரஜா உரிமைகோரி மனுச்செய்பவர்கள்தொகை வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. இதுபற்றி சம்பந்தப்பட்ட இலங்கை இந்தியா செல்பவர்களுக்கு இத்திட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கவிருப்பதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால் விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## இனிமேல் வவுனியாவில் நடைபெறும்

வவுனியா, திங்கள்

இதுவரைகாலமும் கொழும்பில் நடைபெற்றுவந்த நாடற்றவர்களது விசாரணை இம்மாதம் 21ந் திகதிதொடக்கம்வவுனியா உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும் இத்தகவலை குடிவரவு இலாகா வெளியிட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து சுமார் 8,300 பேர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்வதற்காகக் கொழும்புக்கும், கண்டிக்கும் போகவேண்டியிருப்பதாகவும், இந்நிலையை மாற்றி வவுனியாவில் நடாத்த ஒழுங்குசெய்யும்படியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வவுனியா இயக்கத் தலைவர் திரு. கோ. நடேசபிள்ளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 21ந் தேதி நடைபெறவிருக்கும் விசாரணைக்காரரை வவுனியாவுக்கு வரும்படி அழைப்பு விடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## வளர்மதி முதலிடம்

சாவகச்சேரி, திங்கள்

தென்மராட்சி விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சுற்றுப்போட்டி ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றபோது பிரதமவிருந்தினராக வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் கலந்து கொண்டார். பதினொரு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி இப்போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் மீசாலை ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

முதலாமிடத்தைப்பெற்ற வளர்மதி விளையாட்டுக் கழகத்தினர் பொன்னுச்சாமி ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்தைப் பெற்றனர். இரண்டாமிடத்தைப் பெற்ற ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகத்திற்கும் சுற்றுக் கேடயம் வழங்கப்பட்டது.

## குஜராத் வெள்ளம்

# 1000 பேர் பலி; 75,000 கால்நடைகள் மாண்டன

### பல்லாயிரம் ஏக்கர் பயிர் அழிவு

புதுடில்லி, ஆக. 8

வட இந்தியாவின் சரித்திரத்திலேயே இதுவரை கண்டிராத பெருவெள்ளம் இப்பொழுது ஏற்பட்டு உயிருக்கும் பயிருக்கும் உடைமைக்கும் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது.

குஜராத் ராஜ்யத்தில் மட்டும் ஆயிரம் பேர் வெள்ளத்திலுல் உயிரிழந்துள்ளனர். அந்த ராஜ்யத்தில் சூரத் நகரில் நூற்றுக்குமேலானோர் வெள்ளத்திலுல் மாண்டு போயினர்.

குஜராத்தில் 75,000 க்கு அதிகமான கால்நடைகள் வெள்ளத்தில் மாண்டுபோயிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள் வெள்ளத்தில் அமிழ்ந்து பயிர்கள் அழிந்து போயின. நர்மதா நதி இன்னும் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் வடிந்தாலும் குஜராத் ராஜ்ய மக்கள் மீண்டும் மாமூல் வாழ்க்கைக்கு வருவதற்கு பல மாதங்களாகலாம் என்று குஜராத் முதல் மந்திரி தெரிவித்தார்.

## இடிமேல் இடி!

சூரத், ஆக. 12

குஜராத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் இப்படியும் ஒரு பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு வீட்டுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது. அந்த வீட்டினுள் அப்போது ஒரு பெண் பிரசவ வேதனையுடன் துடித்துக்கொண்டிருந்தாள். வெள்ளத்திலிருந்து அவளைக் காப்பாற்றி ஒரு மரத்தின் கிளையில் அவளும் மற்றவர்களும் தங்கியிருந்தனர். மரக்கிளையில் இருக்கும்போதே பிரசவமும் நடந்தது. அந்தோ! பிறந்த குழந்தையைத் தாய் அணைத்து மகிழ்வதற்கு முன்னர், அந்தக் குழந்தையை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. வெள்ளத்துக்குப் பலியானவர்களில் அந்தச் சிசுவும் ஒன்று,

## வடமராட்சியில் சைக்கிள் திருட்டு

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன. கரணவாய் வடக்கில் ஓர் ஆலய உற்சவத்தின்போது சைக்கிளொன்று களவுபோய்விட்டதாம்.

நெல்லியடிச்சந்தியில் புத்தகக் கடையொன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை இனந்தெரியாதநபரொருவர் திருடிக்கொண்டு ஓடமுயற்சிக்கையில் சைக்கிளின் உரிமையாளர் துரத்தவே அவர் சைக்கிளுடன் ஓடிவிட்டதாகவும் பின்னர் சைக்கிளின் முக்கியபாகங்கள் கழற்றப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

## நெசவுத்துறையில் நாடுமுன்னேற...

உடுப்பிட்டி, திங்.

இலங்கையில் அரசாங்கம் வியாங்கொடை முதலிய மூன்று இடங்களில் விசைத்தறிகளை உருவாக்கியுள்ளதாகவும், நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு முன்னோடியாக இவ்விசைத்தறிகள் உருவாக்கப்பட்டுள்ளபோதிலும் கைத்தறிக்கும், விசைத்தறிக்குமிடையே ஏற்படும் போட்டி நெசவுத் தொழிலைப் பாதிக்காது இருப்பதற்காக அரசாங்கம் தீவிர ஆலோசனை செய்துவருவதாக உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இந்தியாவிலே கைநெசவுக்கும், விசைத்தறிகளுக்குமிடையில் எவ்வித துணிகளை உற்பத்தி செய்யவேண்டும் என்பதில் சரியான முடிவுக்கு வராததால் அங்கே ஒரு கஷ்டமான சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும், நல்லவேளையாக இலங்கையில் இவ்வித நெருக்கடி தோன்றவில்லையெனவும் தெரிவித்த திரு. சிவசிதம்பரம் கைத்தறியிலும்விசைத்தறியிலும் நெசவு செய்யவேண்டிய துணிவகைகள் எவையென ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் இலங்கை விரைவில் ஒருநெசவுநாடாகிவிடுமென்றும் கூறினார்,

## திருக்கேதீஸ்வர நீர்விநியோகத்தில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், செவ்.

திருக்கேதீஸ்வர ஸ்தலத்திற்கு நீர்விநியோகத் திட்டத்தில் சில அபிவிருத்திகள் செய்ய ஏற்பாடாகியிருக்கின்றது. இவ்வேலைகள் உள்ளூராட்சி அமைச்சின்மாகாண எஞ்சினியர் அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வேலைக்கு மன்னார் மாவட்ட நீர்விநியோகப் பகுதி அதிகாரி திரு. பி. சித்திரநாதன் நேரடிப் பொறுப்பாளராக இருப்பாரெனவும், மேலும் சுற்றுப்புறங்களிலுள்ள எருக்கலம்பிட்டி, மாந்தை, மாளிகைத்திடல் ஆகிய கிராமங்களுக்கு நீர் விநியோகத்தை விஸ்தரிப்பதுபற்றி ஆராயப்படுவதாகவும் தெரியவருகின்றது.

(ந. நி.)

## இனிமேல் அரை அவுன்ஸ்?

அளவெட்டி, திங்கள்

இதுவரை காலமும் பாலையாளர்களுக்கு ஒரு கப்பனுக்கு வழங்கி வந்த ஒரு அவுன்ஸ் மாசிக்கருவாடு அடுத்தமாதம் முதல் அரை அவுன்ஸ் வீதம் வழங்கப்படும்என அறியப்படுகிறது. தற்சமயம் துவரம்பருப்பு, உழுந்துஎன்பனவும் பாவனையாளர்களுக்குக் கிடைப்பது அரிதாகவுள்ளதாம்.

## தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், செவ்

வடமராட்சியிலுள்ள இரண்டு உப-தபாலகங்களுக்கு தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி கிழக்கு உபதபாலகந்தோரும், எழுதுமட்டுவாள் உபதபால் நிலையமுமே இவ்வாறு தொலைபேசி வசதி பெற்றுள்ளன.

(ந. நி.)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 6[illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org